

Botanical Name : **Cinnamomum glaucescens**

Habit : **Shrub**

தமிழ் பெயர் : கருவப்பட்டை

Hindi Name : Dalchini

Part Used : Leaves, Bark

Uses : Carminative, Astringent, Diuretic, Stimulant
பசித் தூண்டி

Propagation Planting Material by : Seeds

Espacement : 3 Mts. X 3 Mts.

Duration of Crop : Perennial

Grown Area : All Hill Stations of Tamil Nadu



Botanical Name : **Cissus quadrangularis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub / Climber** |
| தமிழ் பெயர் | : | பிரண்டை |
| Hindi Name | : | Hadjod |
| Part Used | : | Stems |
| Uses | : | Dyspepsia, General Weakness<br>ஜீரண கோளாறுகள், நரம்பு தளர்ச்சி |

Propagation Planting Material by : Stem Cuttings

| | | |
|---|---|---|
| Espacement | : | Hedge Plants |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil Nadu - Wild Source |

**பிரண்டை :** பிரண்டையை கணுநீக்கி உணவுப் பொருளாக மிளகு, உப்பு முதலியவற்றைச் சேர்த்து உணவாகப் புசித்து வந்தால், பிணியினால் நொந்து மெலிந்த உடல் வன்மை பெறும். இளந்தண்டை நெய் விட்டு வதக்கி அரைத்துத் துவையல் செய்து உண்பதால் சுவையின்மை, வயிற்றுப் பொருமல் முதலியன போகும். வேரைப் உலர்த்திப் பொடித்து 2 கிராம் கொடுத்துவர, முறிந்த எலும்புகள் சீக்கிரம் கூடும். இதை வெந்நீரில் குழைத்து மேலுக்குப் பற்றிடலாம். பிரண்டையை நெய்விட்டு வறுத்து அரைத்து கொட்டைப்பாக்களவு இருவேளை சாப்பிட்டு வர குருதிப் போக்கு ஒழியும். பிரண்டையை சிறு தீயிலிட்டு வதக்கி சாறு பிழிந்து காதில் இரண்டொரு துளி விட காதுச் சீழ் மாறும். வாரத்திற்கு இருமுறை உண்டு வர எலும்புக்கு வன்மையை கொடுத்து தேய்மானத்தை தடுக்கும்.



Botanical Name : **Citrullus colocynthis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs / Creepers** |
| தமிழ் பெயர் | : | ஆற்றுத்துமட்டி |
| Hindi Name | : | Indrayan |
| Part Used | : | Fruit, Leaves |
| Uses | : | Gastro Intestinnal Irritant<br>குடற்புரட்டி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 2 Mts. X 2 Mts. |
| Duration of Crop | : | 4 Months Yield |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil Nadu - Wild Source |

**ஆற்றுத்தும்பட்டி :** வேரை பொடி செய்து சிறிய அளவில் கொடுக்க வயிற்றுப் பொருமல் இருமல், வயிற்றுப் புழு போகும். வேர், திப்பிலி  ஓரெடையெடுத்து நீர் விட்டரைத்து மாத்திரை செய்து கொடுக்க கீல்வாயு போகும். விதையினின்று எடுக்கும் தைலத்தால் கூந்தல் கருக்கும். மேற்கண்ட முறைகள் அனைத்தையும் கர்ப்பிணிப் பெண்கள் பயன்படுத்தக்கூடாது.



Botanical Name : **Cleome viscosa**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | நாய்கடுகு |
| Hindi Name | : | Jangli Hurthur |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Skin Diseases, Cuts and Wounds<br>தோல் நோய்கள், இரணங்கள் ஆற |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Weed |
| Duration of Crop | : | 3 Months |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil Nadu - Wild Source |

**நாய்க்கடுகு :** இலையை வெந்நீர் விட்டு அரைத்து வீக்கங்களில் போட வீக்கம் கரையும். இலையை வெந்நீர் விட்டு கசக்கிப்பிழிந்த சாற்றில் இரண்டொரு துளி காதில் விட காது நோய் குணமாகும்.



Botanical Name : **Clerodendrum phlomoidis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | தழுதாழை |
| Hindi Name | : | Urni |
| Part Used | : | Leaf, Root |
| Uses | : | Alternative<br>உடற்றேற்றி |

Propagation Planting Material by : Stem Cutting

| | | |
|---|---|---|
| Espacement | : | 2 Mts. X 2 Mts. |
| Duration of Crop | : | Perennial Source |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil Nadu - Wild Source |

**தழுதாழை :** இதன் இலை சாறு உள்ளுக்கு கொடுக்க சுரம் நீங்கும், இலைப்பொடியுடன் ஆளி எண்ணெய் சேர்த்து வெதுப்பி சூட்டுடன் வைத்து கட்ட நெறிக் கட்டிகள் கரையும். இதன் வேரை எண்ணையிலிட்டு காய்ச்சி பிடிப்புக்கு தடவி வரலாம்



Botanical Name : **Clerodendrum serratum**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | சிறுதேக்கு |
| Hindi Name | : | Bharangi |
| Part Used | : | Roots, Leaves |
| Uses | : | Bronchial Asthma, Bronchitis, Sinusitis<br>நுரையீரல் நோய்கள் |
| Propagation Planting Material by | : | Seeds |
| Espacement | : | 2 Mts. X 2 Mts. Natural Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Only in Western Ghats & Eastern Ghats, Yercaud, Kolli Hills, Ooty of Tamil Nadu |

**சிறுதேக்கு :** இலையை அரைத்து வீக்கம், கட்டிகளுக்கு பற்றிட பழுத்துடையும். வேர் பொடியுடன் சுக்குதூள் ஓரளவாக தேனில் அனுபானித்து கொடுக்க இரைப்பிருமல் தீரும்.



Botanical Name : **Cocinium fenestratum**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | மரமஞ்சள் |
| Hindi Name | : | Jhar-i-haldi |
| Part Used | : | Wood |
| Uses | : | Febrifuge, Tonic<br>வெப்பகற்றி, உரமாக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 3 Mts. X 3 Mts. |
| Duration of Crop | : | 1 Year Yield / Perennial Source |
| Grown Area | : | Only in Western Ghats Forest Area & Nilgiris |

**மரமஞ்சள் :** இதனை இடித்து குடிநீரிட்டு கொடுக்க சுரத்திற்கு பின் காணும் அயர்வு நீங்கும். நீர் விட்டு அரைத்து பற்றிட குருதி கட்டிய வீக்கம் குணமாகும்.



Botanical Name : **Corallocarpus epigaeus**

| | | |
|---|---|---|
| Habit | : | **Climber** |
| தமிழ் பெயர் | : | ஆகாச கருடன் கிழங்கு |
| Hindi Name | : | Akasgaddah |
| Part Used | : | Seeds |
| Uses | : | Syphylitic Cases Veneral Complaint<br>பால்வினை நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 3 Mts. X 3 Mts. |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Western Ghats & Eastern Ghats of Tamil Nadu |

**ஆகாச கருடன் கிழங்கு :** இதன் கிழங்கன் பொடி (1–2 வராகன் எடை) எடுத்து சர்க்கரையுடன் கலந்து கொடுக்க கீல்பிடிப்பு, மேக நோய்கள் தீரும். இதன் கிழங்கின் பொடி (4 கி) எடுத்து குடிநீரிட்டு கொடுக்க சீத கழிச்சல் குணமாகும்.



Botanical Name : **Curculico orchioides**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | நிலப்பனை |
| Hindi Name | : | Muslikand |
| Part Used | : | Root Stock |
| Uses | : | Tonic, Aphrodisiac<br>உரமாக்கி, ஆண்மை பெருக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Feet X 1 Feet Natural Source |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Both Western Ghats & Eastern Ghats of Tamil Nadu |

**நிலப்பனை :** இதன் கிழங்கின் பொடியுடன் (8 கி) சர்க்கரை கூட்டி பாலுடன் கலந்து உட்கொள்ள வெண்புள்ளி, கரும்புள்ளி, ஒழுக்கு வெள்ளை, நீரிழிவு நீங்கும்.



Botanical Name : **Curcuma aromatica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | கஸ்தூரி மஞ்சள் |
| Hindi Name | : | Jangli Haldi |
| Part Used | : | Rhizomes |
| Uses | : | Skin Diseases<br>தோல் நோய்கள் |
| Propagation Planting Material by | : | Rhizomes (Seed Material) |
| Espacement | : | 1 Feet X 1 Feet |
| Duration of Crop | : | 9 Months |
| Grown Area | : | Cultivated in Erode & Salem |

**கஸ்தூரி மஞ்சள் :** இதனை அரைத்து மேலுக்கு பூச கரப்பான் தீரும். இதனை எண்ணெயிலிட்டு காய்ச்சி உடல்வலி முதலிய நோய்களுக்கும், அடிபட்ட நோய்களுக்கும் மேலுக்கு தேய்க்கலாம். இதன் தூள் (325 மி.கி. - 500 மி.கி.) உள்ளுக்கு கொடுத்து வர வயிற்று நோய், குன்மம் நீங்கும். பெண்கள் தினமும் இதை தேய்த்து குளித்து வர தேவையில்லாத உரோமங்கள் வளர்ச்சியை தடுக்கும். உடல் பொலிவு பெரும்.



Botanical Name : **Cyanodan dactylon**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | அருகம்புல் |
| Hindi Name | : | Doorva |
| Part Used | : | Root and Juice of Entire Plant |
| Uses | : | Epistaxis, Oedema<br>தோல் நோய்கள், கர்பப்பை கோளாறுகள் |

Propagation Planting Material by : Stem / Roots

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**அருகம்புல் :** அறுகம் புல்லை இடித்து சாறு எடுத்து கண்ணுக்கு பிழிய கண்ணோயும் கண் புகைச்சலும் தீரும். மூக்கிலிட மூக்கிலிருந்து பாயும் குருதி நிற்கும். காயம் பட்ட இடத்தில் பூச அதிலிருந்து வடியும் குருதி நிற்கும். புண்களின் மீது தடவ புண் குணமாகும். அறுகம் புல்லுடன் சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்து தடவி வர சொரி – சிரங்கு, படர்தாமரை போகும். அருகம்புல் வேர் கஷாயம் குடித்து வர சரும பிரச்சனை குறையும். தோல் நோய்கள் தீர தயாரிக்கும் மருந்துகளில் முக்கிய பங்காற்றுகிறது.



Botanical Name : **Cyperus rotundus**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | கோரைக்கிழங்கு |
| Hindi Name | : | Nagarmotha |
| Part Used | : | Bulbous Root |
| Uses | : | Diarrhoea, Indigestion, Dysentery<br>வயிற்றுப் பொறுமல், வயிற்று வலியுடன் கூடிய பேதி நிறுத்த |

Propagation Planting Material by : Tuber

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | 4 Months |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**கோரைக்கிழங்கு :** கோரைக்கிழங்கு மாவை உட்கொள்ள காச நோய் தீரும். பச்சை கிழங்கை அரைத்து மார்பில் பற்றிட பால் சுரக்கும். தேள் கடிவாயிலும் பற்றிடலாம், உடலில் பூச வியர்வை நாற்றம் விலகும். இஞ்சி, கோரைக்கிழங்கு இரண்டையும் இடித்து தேன் விட்டரைத்து கொடுக்க (சிறு சுண்டை அளவு) சீதக்கழிச்சல் போகும்.



Botanical Name : **Datura metal**

Habit : **Herb**

தமிழ் பெயர் : ஊமத்தை

Hindi Name : Dhatura

Part Used : Whole Plant

Uses : Asthma, Chronic Cough, Rheumatic Swellings
வாத நோய்கள்

Propagation Planting Material by : Seeds

Espacement : Natural Source

Duration of Crop : 4 Months

Grown Area : Distribution is common all the districts of Tamil nadu - Wild Source

**ஊமத்தை :** இதன் இலையை காயவைத்து பொடி செய்து 100 மி.கி. அளவு உள்ளுக்குக் கொடுக்க இரைப்பு நீங்கும். இலைச்சாறுடன் நல்லெண்ணை சேர்த்துச் செய்யப்படும் தைலம், புண்களினால் உண்டாகும் வலியை குறைப்பதுடன் விரைந்து புண்களை ஆற்றும். இதன் இலையை வதக்கி ஒற்றடமிட முழங்கால் மூட்டுவலி, கட்டிகளினால் உண்டாகும் வலி தணியும்.



Botanical Name : **Decalepis hamiltonii**

Habit : **Shrub / Climber -** This plant is grown in the Eastern Ghats of TN, Mainly in Salem, North Arcotand Part of Dharmapuri District.

தமிழ் பெயர் : மலை நன்னாரி

Hindi Name : Nannari

Part Used : Roots

Uses : Appetizer, Inflammatory Swelling
பசியைத் தூண்டி, வீக்கமுருக்கி

Propagation Planting Material by : Seeds

Espacement : 2 Mtr. X 2 Mtr.

Duration of Crop : 1 Year / Perennial Source

Grown Area : Eastern Ghats & Western Ghats of Tamil Nadu

**நன்னாரி :** நன்னாரியின் வேர், இலை, காய், பூ இவைகளை நெய்யுடனே வதக்கி வறுத்துக் கொண்டு சிறிதளவு புளி, மிளகு, சேர்த்து துவையலாக செய்து 48 நாள் உண்டு வர அக்குள் நாற்றம், வியர்வை நாற்றம், உடல் சூடு நீங்கும். மலைநன்னாரி வேரை குடிநீரிட்டு நல்லெண்ணெயில் காய்ச்சி உபயோகித்து வீக்கத்தின் மேல் பூசி வர வீக்கம் குறையும்.



Botanical Name : **Desmodium gangeticum**

Habit : **Shrubs**

தமிழ் பெயர் : ஓரிலை (அ) புள்ளடி

Hindi Name : Sarivan

Part Used : Roots

Uses : Galactagogue
பாற்ப்பெருக்கி

Propagation Planting Material by : Seeds

Espacement : 60 CM X 60 CM

Duration of Crop : 4 Months

Grown Area : Distribution is common all the districts of Tamil nadu - Wild Source

**புள்ளடி :** இதன் பூண்டை குடிநீரிட்டுக் கொடுக்க சுரம் நீங்கும்.



Botanical Name : **Eclipta alba**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | வெள்ளை கரிசாலை |
| Hindi Name | : | Bhangra |
| Part Used | : | Juice of Leaves, Herb, Oil |
| Uses | : | Tonic, Hepatic Tonic<br>உரமாக்கி, ஈரல் தேற்றி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Feet X 1 Feet |
| Duration of Crop | : | 4 Months |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu in Water Logging Area & Paddy Fields |

**வெள்ளை கரிசாலை :** இதன் இலைச்சாற்றை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்து காய்ச்சி தலைக்குத் தேய்த்து வர முடி கறுத்துத் தழைத்து வளரும். முடி உதிர்தல் - புழு வெட்டு போன்றவற்றிற்கு நல்ல மருந்தாகும்.இதன் இலைச்சாறு 90 துளி எடுத்து நீர் அல்லது மோர் சேர்த்து சாப்பிட பாம்பின் கடி நஞ்சு தீரும். கரிசலாங்கண்ணிசாறு 2 துளி எடுத்து 8 துளி தேனில் கலந்து கொடுக்க கைக்குழந்தைக்கு உண்டாகும் ஜலதோஷம் நீங்கும். கரிசலாங்கண்ணி கீரையை முறைப்படி சமைத்து உண்ண காமாலை நீங்கும்.



Botanical Name : **Elettaria cardamomum**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | ஏலக்காய் |
| Hindi Name | : | **Choti Elachi** |
| Part Used | : | Seeds |
| Uses | : | Indigestion, Abdominal Pain, Repiratory Infections<br>அஜீரணக் கோளாறுகள், நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds / Saplings

| | | |
|---|---|---|
| Espacement | : | 2 Mts. X 2 Mts. |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Yercaud, Kolli Hills, Cumbum, Theni, Ooty & Courtrallum |

**ஏலக்காய் :** ஏலக்காய் 68கி, பனைவெல்லம் 170கி, இவ்விரண்டையும் 350 மி.லி. நீர்வீட்டுக் காய்ச்சி 30 மி.லி. குடிக்க வெப்பத்தினால் உண்டாகும் தலைமயக்கம் நீங்கும். காட்டு ஏலக்காயை குடிநீரிட்டு வாய் கொப்பளித்து வர வாய்நாற்றம் பல்ஈறு புண் நீங்கும். காட்டு ஏலக்காய் ஒரு பங்கு, வெள்ளரி விதை 2 பங்கு சேர்த்துக் குடி-நீரிட்டு 30 மி.லி. வீதம் உட்கொள்ள கல்லீரல் நோய் தீரும். மேலும் சிறுநீரைப் பெருக்கி நீரடைப்பை போக்கும். காட்டு ஏலக்காய் பொடியை 650 மி.கி. - 950 மி.கி. அளவு உட்கொள்ள தலைவலி மற்றும் நாவறட்சி தீரும். ஏலரிசி, சுக்கு, இலவங்கம், சீரகம் இவைகளை சம எடை எடுத்து பொடித்து தூளாக்கி 17 கி வீதம் உட்கொள்ள, வயிற்றுவலி, இரைப்பை புண் குணமாகும்.



Botanical Name : **Embelia ribes**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | வாய்விடங்கம் |
| Hindi Name | : | Barberang |
| Part Used | : | Fruits |
| Uses | : | Anthelmintic, Carminative<br>புழுக்கொல்லி, அகட்டவாய்கற்றி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 3 Mts. X 3 Mts. |
| Duration of Crop | : | 1 Year / Perennial Source |
| Grown Area | : | Eastern Ghats & Western Ghats of Tamil Nadu |

**வாய்விடங்கம் :** இதன் விதையை நன்றாயரைத்து வெண்ணெயிற் குழப்பித் தலைக்குப் பற்றிட தலைவலி நீங்கும். இதன் விதையைப் பொடித்து 4-16 கி வீதம் தேனில் குழைத்து ஒரு நாளைக்கு 2-3 முறை கொடுத்து. அடுத்த நாள் சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்க வயிற்றுப்புழுக்கள் செத்து வெளிபடும். இதன் விதையின் பொடி 2-4 கி எடுத்து பாலில் கலக்கி சிறுவர்களுக்கு கொடுக்க அஜீரணத்தால் உண்டாகும் வயிற்று வலி நீங்கும். தேள் கடிக்கு விதையை அரைத்து பூசலாம்.



Botanical Name : **Eugenia jambolana**

| | | |
|---|---|---|
| Habit | : | **Tree** |
| தமிழ் பெயர் | : | நாவல் |
| Hindi Name | : | Jamun |
| Part Used | : | Bark, Seeds |
| Uses | : | Diabetic<br>சர்க்கரை நோய் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**நாவல் :** நாவல் பழத்தின் மேல் தோலை சாப்பிட அடிக்கடி சிறுநீர் வெளியாதல் நீங்கும். நாவறட்சி நீங்கும். நாவல் வேர் ஊறிய நீரானது சர்க்கரை நோயைக் குணபடுத்தும். உடலில் குளிர்ச்சி உண்டாக்கி ஆண்மையைப் பெருக்கும். இதன் விதையை பொடித்து 2-4 கி வீதம் கொடுக்க சர்க்கரை நோய் நீங்கும். வெள்ளை நாவற்பழம் உண்டு வர இரத்த சிவப்பு அணுக்கள் அதிகரிக்கும். மேலும் விந்தணுக்கின் எண்ணிக்கையும் கூடும். இதன் பழத்தினால் ஒவ்வாமை அல்லது தீங்கு ஏற்படின் நெல்லிக்காயை மென்று தின்று குளிர்ந்த நீர் குடிக்க வேண்டும்.



Botanical Name : **Euphorbia hirta**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | அம்மான் பச்சரிசி |
| Hindi Name | : | Doodhi |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Cough, Asthma, Ulcer, Wounds<br>நுரையீரல் நோய்கள், புண்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | 4 Months |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**அம்மான் பச்சரிசி (சித்திர பாலாடை) :** சிறுஅம்மான் பச்சரிசி காயைத் துவையல் செய்து சாப்பிட மலச்சிக்கல் நீங்கும். சிறுஅம்மான் பச்சரிசியின் பாலை புண்களுக்கும் உதடு மற்றும் நா வெடிப்புகளுக்கும் தடவ புண் ஆறும். நக சுற்றுக்கு தடவலாம். சிவப்பு அம்மான் பச்சரிசியை காயவைத்து பொடித்து அதனளவே கற்கண்டுப் பொடியைச் சேர்த்து வேளைக்கு 85 கி. உட்கொண்டு, உடனே பசுவின் பாலைச் சாப்பிட விந்தணுக்களின் எண்ணிக்கை கூடும். எரி புண், மலக்கட்டு, வெள்ளை கசிவு, மேகத்தடிப்பு, நமைச்சல், இவைகளை நீங்கும்.

**சிறு அம்மான் பச்சரிசி :** இதை பசுவின் பால் குணத்திற்கு ஒப்பாக கூறலாம்.